# இனம்

இனம் இனத்தைச் சேரும்

ISSN : 2455 - 0531

Mail Id: inameditor@gmail.com
editor@inamtamil.com

## பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ்

## International E-Journal of Tamil Studies

**இலக்கணம், இலக்கியம், கலை, பண்பாடு, அறிவியல், கணினிசார் ஆய்வை இனங்காண!**

**மலர்:3 இதழ்:12 பிப்ரவரி 2018** Vol. 3 Issue : 12 February 2018





க.பாலாஜி
வி.வசந்தா
சே.முனியசாமி
இரா.சி.சுந்தரமயில்
தி.நிரஞ்சினி
யே.டிலானி
நா.பிரபு
கி.சங்கர நாராயணன்
சு.பேச்சியம்மாள்
மா.யோகராஜ்

த.சத்தியராஜ்
ச.முத்துச்செல்வம்
அ.கோவிந்தராஜன்
ப.மணிகண்டன்
இரா.வைதேகி
மா.விஜயலெட்சுமி

சி.யுவராஜ்
கா.ராஜகணபதி
மு.முனீஸ்மூர்த்தி
இரா.விஜயராணி
R.NITHYA

Inam ISSN : 2455 - 0531

# இனம்

பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ்
An Internationally Refereed e_ Journal of Tamil Studies

## பதிப்பாசிரியர்

முனைவர் மு.முனீஸ்மூர்த்தி
முனைவர் த.சத்தியராஜ்

## ஆலோசனைக் குழு

முனைவர் செ.வை.சண்முகம் (சிதம்பரம்)
முனைவர் சு.இராசாராம் (நாகர்கோயில்)
முனைவர் சிலம்பு நா.செல்வராசு (புதுச்சேரி)
முனைவர் ந.வேலுச்சாமி (சேலம்)

## ஆசிரியர் குழு

முனைவர் ஆ.மணி (புதுச்சேரி)
முனைவர் க.பாலாஜி (கோவை)
முனைவர் இரா.குணசீலன் (திருச்செங்கோடு)
முனைவர் ந.இராஜேந்திரன் (கோவை)
முனைவர் சி.இரவிசங்கர் (மதுரை)
முனைவர் ப.சிவமாருதி (தாய்லாந்து)
முனைவர் ச.முத்துச்செல்வம் (மதுரை)
முனைவர் சா.விஜய ராஜேஸ்வரி (கேரளா)
திரு சு.ஸ்ரீகந்தராசா (ஆஸ்திரேலியா)

## இதழாக்கமும் வெளியீடும்

*முனைவர் த.சத்தியராஜ்*
கோயமுத்தூர்
*09600370671*
*inameditor@gmail.com*
*www.inamtamil.com*

பிப்ரவரி 2018 மலர் : 3 இதழ் : 12
February 2018 Volume III Issue 12

# உள்ளே ...

**செவ்விலக்கியப் பிரதிகளில் பரத்தமை - சமூகவியல் நோக்கில் மீள்வாசிப்பு [தொல்காப்பியம், நற்றிணை, குறுந்தொகைப் பனுவல்களை முன்வைத்து]**
முனைவர் க.பாலாஜி | 4

**நுண்கடன் திட்டங்களினால் ஏற்படும் விளைவுகள்**
வி.வசந்தா | 18

**வெண்ணீர்வாய்க்கால் இரா.பாண்டிப்புலவர் வாழ்வும் வரலாறும்**
சே.முனியசாமி | 26

**நாட்டுப்புறப் பாடல்களின் வளர்ச்சிப் படிநிலைகள்**
முனைவர் இரா.சி. சுந்தரமயில் | 35

**சசூரின் மொழியியல் ரீதியான அமைப்பியலும் பின்அமைப்பியலும்**
திரவியராசா நிரஞ்சினி | 43

**வகுப்பறைக் கற்றலில் பவ்லோவின் கற்றல் கோட்பாடு**
யேசுஐயா டிலானி | 52

**தமிழில் வட்டார வழக்குச் சொல்லகராதிகள் உருவாக்கம்**
முனைவர் நா.பிரபு | 61

**தமிழ்க் காப்பு இயத்தின புதிய வினைக் கோட்பாடு - உருவாக்கமும் கட்டமைப்பும்**
முனைவர் கி.சங்கர நாராயணன் | 65

**நெல்லை மாவட்டம் கங்கைகொண்டான் இராஜபதி மாரியம்மன் கொடை விழா – அறிமுக நோக்கு**
முனைவர் சு.பேச்சியம்மாள் | 75

**இலங்கையில் தொலைக்காட்சி விளம்பரங்களால் வணிக நடவடிக்கைகளில் ஏற்படும் ஒழுக்க மீறுகைகள்**
திரவியராசா நிரஞ்சினி & மா.யோகராஜ் | 80

**வஜ்ஜாலக்கத்தில் வள்ளுவரின் ஆள்வினைச் சிந்தனை**
முனைவர் த.சத்தியராஜ் | 85

**ஒச்சாவும் ஒத்தக்காது ஆடும் (நூலறிமுகம்)**
முனைவர் ச.முத்துச்செல்வம் | 90

**ஐங்குறுநூறு - மருதத்திணைப் பாடல்கள் வெளிப்படுத்தும் தலைவன தலைவியின் உளநிலை**
முனைவர் அ.கோவிந்தராஜன் | 94

**அகநானூறு சுட்டும் மருதநிலச் சிறப்பு**
ப.மணிகண்டன் | 98

**பதிற்றுப்பத்தில் உழவும் உழவரும்**
இரா.வைதேகி | 102

**மலைபடுகடாம் சுட்டும் நன்னன்சேய் நன்னனின் நாட்டுவளம்**
மா.விஜயலெட்சுமி | 105

...

# இவ்விதழுக்குக் கருத்துரை வழங்கிய மதிப்பீட்டறிஞர்கள்

முனைவர் ஆ.மணி (புதுச்சேரி)
முனைவர் ந.இராஜேந்திரன் (கோவை)
முனைவர் க.பாலாஜி (கோவை)
முனைவர் ம.தமிழரசன் (கோவை)
முனைவர் ச.முத்துச்செல்வம் (மதுரை)
முனைவர் முகம்மது ரஃபீக் கான் (கோவை)
முனைவர் ப.சிவமாருதி (தாய்லாந்து)
முனைவர் சா.விஜய ராஜேஸ்வரி (கேரளா)


**சங்ககால மக்களின் வாழ்வியலில் மனிதம்**
சி.யுவராஜ் | 109

**குறுந்தொகைத் திறனுரைகள் - நூல் மதிப்பீடு**
கா.ராஜகணபதி | 114

**ஆய்வாளர் அணுக வேண்டிய கருவி நூல்கள்**
மு.முனீஸ் மூர்த்தி | 121

**மலைபடுகடாம் சுட்டும் விருந்தோம்பல்**
முனைவர் இரா.விஜயராணி | 126

**Perspectives from second Language acquisition**
R.Nithya | 131


...

மதிப்பிடப்பெற்றது

# அகநானூறு சுட்டும் மருதநிலச் சிறப்பு



**ப.மணிகண்டன்**
முனைவர் பட்ட ஆய்வாளர்
பாரதிதாசன் உயராய்வு மையம்
பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி - 24

சங்க இலக்கிய நூல்களுள் அகச் செய்திகளைக் கூறும் நூல்களில் ஒன்று அகநானூறு. மருதத்திணையின் உரிப்பொருளாக ஊடலைச் சுட்டுகின்றார் தொல்காப்பியர். மருதம், வயலும் வயல் சார்ந்த பகுதி என்று குறிப்பிடப்படுகின்றது. அவ்வகையில், அகநானூறு — மருதத்திணைப் பாடல்கள் சுட்டும் வயல்வெளிக் காட்சிகளை அடையாளப்படுத்துவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

வயலின் சிறப்புகள்

ஒவ்வொரு மனிதனுக்கும் வயல் பகுதி உணவளிக்கும் அமுதசுரபியாகும். மாதம் மும்மாரி மழைபொழிந்து, முப்போகம் நெல்விளைந்து ஏழை எளியோரின் வயிற்றினை நிரப்பும் வயல் பகுதியானது கொடைத்தன்மை பெற்றதாகும்.

வயல் என்பதற்கு "கழனி, மருதநிலம், வெளி" என்று கழகத் தமிழ் அகராதி பொருள் கூறுகின்றது.

**வயலில் சில நிகழ்வுகள்**

ஒரு கொக்கு சிறிய உயரத்தில் பறக்கின்றது. அந்தக் கொக்கு மீனினைப் பிடிப்பதற்குக் காத்திருக்கிறது. அதனருகில் மிக அதிகமான மகிழ்ச்சியில் கள்ளுண்ட நிலையில் உழவன் ஒருவன் காஞ்சி மரத்தின் கிளைகளையும் கரும்புத் துண்டுகளையும் வைத்து அணையிலிருந்து நீரினைத் தன்னுடைய வயல் பகுதியில் சேமித்து வைத்திருந்ததை,

"கூரல் கொக்கின் குறும்பறைச் சேவல்,
வெள்ளி வெண்தோடு அன்ன, கயல்குறித்து
கள்ஆர் உவகைக் கலிமகிழ் உழவர்
காஞ்சிஅம் குறுந்தறி குத்தி, தீம்சுவை
மென்கழைக் கரும்பின் நன்பல மிடைந்து,
பெருஞ்சேய் நெல்லின் பாசவல் பொத்தி" (அகம்.346:3-8)

என்ற பாடலடிகளில் நக்கீரர் எடுத்தியம்பியுள்ளார்.

**வயலினால் ஏற்படும் பயன்கள்**

நீர் அதிகமாக வந்து மோதும் தோட்டம் அருகேயுள்ள இளம் நெற்கதிர்களைக் கொண்ட வயல்பகுதியினைப் பரணர் கூறியதை,

"மலிபுனல் பொருத மருதுஓங்கி படப்பை
ஒலிகதிர்க் கழனி..." (அகம்.376:3-4)

என்ற பாடலடிகளின் மூலம் காணமுடிகின்றது.

நீளமாக வளர்ந்த நெற்கதிருக்கு உவமையாகப் பெண்ணின் நடையினைப் பரணர் விளக்கிருப்பதை,

"இருங்கதிர்க் கழனிப் பெருங்கவின் அன்ன
நலம்பா ராட்டி நடைஎழில் பொலிந்து" (அகம்.326:6-7)

என்ற பாடலடிகளின் மூலம் உணரலாம்.

நீர் சூழ்ந்த பகுதியின் அருகே மருத மரங்கள் காணப்படுகின்றன. அதனருகே நெற்களத்தில் நெற்போர்கள் பிரித்துக் கடாவைவிட்டுப் போரடித்தனர். பின்னர் நெல்லைத் தூற்றியதை,

"தாழ்சினை மருதம் தகைபெறக் கவினிய
நீர்சூழ் வியன்களம் பொலிய, போர் அழித்து,
கள்ஆர் களமர் பகடுதலை மாற்றி
கடுங்காற்று எறிய, போகிய துரும்புடன்
காயல் சிறுதடிக் கண்கெடப் பாய்தலின்" (அகம்.366:1-5)

என்ற பாடலடிகளின் மூலம் குடவாயிற் கீரத்தனார் கூறியிருக்கின்றார்.

**வயல் பகுதியும் இயற்கைச் சூழலும்**

வயலில் முட்செடிகள் நிறைந்துள்ளன. நெல் அறுவடை செய்யும் மக்கள் மீனினைச் சுட்டு உண்டனர். நெற்கதிர்களைக் கட்டுக்கட்டாய்க் களத்துமேட்டில் அடுக்கி வைத்திருந்தனர். அதனைச் சுற்றிக் கோரைப் புற்கள் முளைத்திருந்தன. அதனருகில் மாமரத்தின் கிளைகளிலிருந்து பூக்கள் மண்ணில் அழகாய் விழுந்திருந்தன. இதனை,

"மணிமருள் மலர முள்ளி அமன்ற,
துணிநீர் இலஞ்சிக் கொண்ட பெருமீன்
அரிநிறக் கொழுங்குறை வெளவினர் மாந்தி,
வெண்ணெல் அரிநர் பெயர்நிலைப் பின்றை
இடைநிலம் நெரிதரு நெடுங்கதிர்ப் பல்சூட்டுப்
பனிபடு சாய்ப்புறம் மாஅத்து அலங்குசினைப் புகல்பூ
மயங்குமழைத் துவலையின்..." (அகம்.236:1-8)

என்ற பாடலடிகளின் மூலம் உணரமுடிகின்றது.

பல எருமை மாடுகள் தான் கட்டியிருந்த இடத்தைவிட்டு, கயிற்றை அறுத்துக்கொண்டு தம் கொம்பினால் வேலியைத் தூக்கியெறிந்தன. வயல் பகுதியில் இருந்த மீன்கள் அனைத்தும் ஓடுமாறும் ஒருசில வள்ளைக்கொடிகளை அழித்தும் தாமரை மலர்களைத் தின்றுகொண்டும் சென்றதை,

"சேற்றுநிலை முனைஇய செங்கண் காரன்
ஊர்மடி கங்குலில், நோன்தளை பரிந்து,
கூர்முள் வேலி கோட்டின் நீக்கி,
நீர்முதிர் பழனத்து மீன்உடன் இரிய,
அம்தூம்பு வள்ளை மயக்கி தாமரை
வண்டுஊது பனிமலர்..." (அகம்.46:1-6)

என்ற பாடலடிகளின் மூலம் அள்ளூர் நன்முல்லையார் கூறியிருக்கிறார்.

வயல்பகுதியில் மிக அழகான சிவந்த தாமரை மலர்கள் இருக்கின்றன. வயலில் மீன்கள் அதிகமாக துள்ளல்போட்டு விளையாடுகின்றன. மீன்களை உண்ணுவதற்குத் தாமரை இலைமேல் மீன்கொத்திப் பறவைகள் அமர்ந்திருப்பதை,

"எரிஅகைந் தன்ன தாமரைப் பழனத்து,
பொரிஅகைந் தன்ன பொங்குபல் சிறுமீன்,
வெறிகொள் பாசடை உணீஇயர் பைபயப்
பறைதபு முதுசிரல் அசைபுவந்து இருக்கும்" (அகம்.106:1-4)

என்ற பாடலடிகளின் மூலம் ஆலங்குடி வங்கனார் உணர்த்தியிருக்கிறார்.

வயதான பசுக்கள் நன்கு விளைந்த வயல்பகுதியில் இருக்கும் நெற்கதிர்களை மேய்கின்றன. அவ்வாறிருக்கின்ற நெற்கதிர்கள் குதிரைகளின் தலையில் வைத்த இரட்டைக் கவரிகளைப் போன்றிருக்கின்றன. இவற்றைக் கண்ட வயல் காவலர் பசுக்களுக்குக் கரும்பைக் கொடுத்து, பாகல் என்னும் கொடியால் காஞ்சிமரத்தில் கட்டினார். இதனை,

"முரசுடைச் செல்வர் புரவிச் சூட்டும்
மூட்டுறு கவரி தூக்கி யன்ன,
செழுஞ்செய் நெல்லின் சேயரிப் புனிற்றுக்கதிர்
மூதா தின்றல் அஞ்சி, காவலர்
பாகல் ஆய்கொடிப் பகன்றையொடு பரீஇ,
காஞ்சியின் அகத்து, கரும்புஅருத்தி, யாக்கும்" (அகம்:156:1-6)

என்ற பாடலடிகளின் மூலம் ஆவூர் மூலங்கிழார் உரைக்கின்றார்.

**வயலின் அழகிய காட்சி**

தாமரைப் பூக்கள் நன்கு முற்றிப் பூத்துள்ளன. தாமரை இலைகள் யானையின் காது போன்றுள்ளன. அதன் மொட்டுக்கள் சிறப்பாக இருந்தன. இந்தக் காட்சியெல்லாம் மகளிரின் முகம் போன்றிருந்தன. அவ்வாறு உள்ளதில் வயல்பகுதியில் பறவைகளின் ஒலி மிகுதியாகக் காணப்பட்டன. வயலில் நண்டுகள் அங்குமிங்கும் ஓடி விளையாண்டன. அப்போது நாரை ஒன்று தன்னை உண்பதற்குத் தேடுகிறது எண்றெண்ணி பகன்றைச் செடியருகே நண்டுகள் வலைக்குள் புகுந்து கொண்டதை,

"கடல்கண் டன்ன கண்அகன் பரப்பின்
நிலம்பக வீழ்ந்த வேர்முதிர் கிழங்கின்
கழைகண் டன்ன தூஉம்புடைத் திரள்கால்
களிற்றுச்செவி அன்ன பாசடை மருங்கில்
கழுநிவந் தன்ன கொழுமுகை இடைஇடை
முறுவல் முகத்தின் பல்மலர் தயங்க,
பூத்த தாமரைப் புள்இமிழ் பழனத்து,
வேப்புநனை அன்ன நெடுங்கண் ஈர்ஞெண்டு
இரைதேர் வெண்குருகு அஞ்சி, அயலது
ஒலித்த பகன்றை இருஞ்சேற்று அள்ளல்
திதலையின் வரிப்ப ஓடி, விரைந்துதன்
நீர்மலி மண்அளை" (அகம்.176:1-12)

என்ற பாடலடிகளின் மூலம் மருதம் பாடிய இளங்கடுங்கோ மிகவும் நேர்த்தியாக வயலின் காட்சியைக் காட்சிப்படுத்தியிருக்கிறார்.

**முடிவுரை**

காலங்காலமாக மருதத்திணையில் காணப்படும் வயல் பற்றிய காட்சிப் புனைவுகள் சங்க இலக்கியங்கள் முதல் தற்கால நவீன இலக்கியங்கள் வரை விரவிக் கிடக்கின்றன.

அகநானூற்றில் காணப்படும் மருதத்திணையில் வயல் பற்றிய புலவர்தம் புனைவுகள் இயற்கைச் சூழலோடு இணைந்திருப்பதை அறிய முடிகின்றது.

அகநானூற்றில் மருதத்திணையில் மொத்தம் பதினைந்து இடங்களில் வயல் பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளன.

இயற்கைக் காட்சிகளை வயலோடு இணைத்துப் பல புலவர்கள் அகநானூற்றில் மருதத்திணையில் பாடியுள்ளனர்.

**பார்வை நூல்கள்**


- கழகப் புலவர் குழு, 1964 (மு.ப.), கழகத் தமிழ் அகராதி, திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.
- சுப்பிரமணியன் ச.வே.(உ.ஆ.), 2009, அகநானூறு மூலமும் உரையும், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்.
- செயபால் இரா. (உ.ஆ.), 2003, அகநானூறு மூலமும் உரையும் பகுதி (1), பகுதி (2), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
- பாலுச்சாமி, எ., 2011, மருதத்தில் மக்கள் வாழ்வியல், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.